பிற்பகல் 12 -15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு கேள்விதான், (குறுக்கீடு) இன்றைக்கு 4 கவன ஈர்ப்பு இருக்கிறது. அதிகமாக இருக்கும்போது ஒரு கேள்விதான்.

(ஆ) திருவல்லிக்கேணி தொகுதியில் அசுடிகான் பகதூர் தெருவில் சில நிலங்களைக் குடிசைப் பகுதியாக பிரகடனம் செய்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அசுடிகான் தெருவில் உள்ள நிலத்தில் ஏழை எளிய மக்கள் 40 வருடங்களுக்கும் மேலாக அதில் வசித்து வருகிறார்கள். இதை குடிசை மாற்று வாரியம் 1971 பிரிவு 3(1) கீழ் குடிசை பகுதியாக அரசு ஆணை எண் 1559 பிரகடனம் செய்யப்பட்டு உள்ளது. இந்த நிலையில் ஒருவர் விலைக்கு வாங்கியிருக்கிறார்". இது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சென்னையில் பல இடங்களில் தனியார்களுக்குச் சொந்தமான நிலங்களில் குடிசைப்பகுதிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் அசுடிகான் பகதூர் தெரு குடிசைப்பகுதியும் ஒன்றாகும். அசுடிகான் பகதூர் தெரு குடிசைப்பகுதி சென்னை மாவட்டம் மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டம், திருவல்லிக்கேணி கிராமத்தில் கீழ்க்கண்ட தனியார் நிலங்களில் அமைந்துள்ளது.

வரிசை எண்.	பிளாக் எண்.	புல எண்.	விஸ்தீரணம் கா.கி.ச.அடி	நில உரிமையாளர் பெயர்.
1	58	3053/4	0.01.0503	ஜூபைதா பேகம்
2		3059	0.00.1701	ரகீமா பேகம்
3		3060/1	0.00.0575	ரெங்கநாத செட்டியார்
4		3060/2	0.02.1114	பட்டம்மாள்
5		3060/3	0.00.0275	எஸ். ராஜம்மாள்
6		3070/பகுதி	0.00.1500	எஸ். ராஜம்மாள்
			0.05.0868	

2. மேற்கண்ட நிலங்களை வாரியச் சட்டம் 11/71, பிரிவு 3(1)-ன்கீழ் 1971 மற்றும் 1972 ஆம் ஆண்டுகளில் குடிசைப்பகுதி எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. மேற்கூறப்பட்ட புல எண்களில் புல எண் 3053/4 மற்றும் 3059-ன் உரிமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த ரிட்மனு வழக்கில் 23-1-1990-ல் வழங்கிய தீர்ப்பில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியச் சட்டம் பிரிவு 3(1)ஏ மற்றும் பி-யின் கீழ் மேற்படி இரு புல எண்களில் உள்ள நிலத்தினை மட்டும் குடிசைப்பகுதியென பிரகடனப்படுத்தப்பட்ட அரசு உத்தரவு செல்லுபடியாகாது என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனை வாரியம் ஒரு தீர்மானம் மூலம் பதிவு செய்துள்ளது.

3. மேலே சொல்லப்பட்ட ஆறு புல எண்களிலுள்ள நிலங்களின் மொத்தப் பரப்பு 5 மனை 868 சதுர அடி. இதில் 90 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள்.

4. புல எண்கள் 3053/4 மற்றும் 3059 ஆகிய நிலங்களின் மொத்தப் பரப்பு 2 மனைகளுக்கும் குறைவாக உள்ளது. இதில் 30 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலும் மேற்படி நிலங்கள் தனியார் நிலங்கள் என்பதாலும், அந்நிலங்களின் சொந்தக்காரர்கள் மேற்படி வாரிய சட்ட பிரிவுகளுக்கு உட்பட்டவர்கள் இல்லை. இவ்விரு புல எண்களைத் தவிர மற்ற நான்கு புல எண்கள் ஏற்கனவே வாரியச் சட்டத்தின் கீழ் குடிசைப்பகுதி என பிரகடனப்படுத்தப்பட்டது தொடர்ந்து உள்ளது.

[திரு. சே. ரகுபதி] [1996 மார்ச் 1

5. மேலே குறிப்பிடப்பட்ட ஆறு புல எண்களின் மொத்த பரப்பளவு *5* மனை *868* சதுர அடி என்பதாலும், இவை தனியார்களுக்குச் சொந்தமானது என்பதாலும் அந்நிலங்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தனது திட்டப் பணிக்கு பயன்படுத்தும் வாய்ப்பு இல்லை.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். *6* புல எண்களில் *4* எண்கள்தான் குடிசைமாற்று வாரியத்தில் இருக்கின்றன மற்ற *2* எண்களும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும், எனக்குத் தெரிந்த ஒருசில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். அந்த நிலமானது சுபேதா என்ற பெண்மணிக்கும் பட்டம்மாள் என்ற பெண்மணிக்கும் சொந்தமானது. அவர்கள் இருவரும் இப்போது இல்லை. இறந்துவிட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகள்தான் இருக்கிறார்கள். அதில் திருமதி பட்டம்மாளின் பிள்ளைகள் விற்கவில்லை, அவர் குடிசை மாற்று வாரியத்திற்கு தருவதாக இருக்கிறார். ஆனால் குடிசை மாற்று வாரியத்தில் இருந்து கொடுக்கும் பணம் மிகவும் குறைவாக இருப்பதால், ஒரு சரியான, நியாயமான விலை தந்தால் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லுகிறார். ஆனால் திருமதி சுபேதாவின் வாரிசுகள் ரஷீதுபாய் என்பவருக்கு விற்றிருக்கிறார்கள். நான் ரஷீதுபாயையும் சென்று சந்தித்தேன். அவரும் ஒருசில நாட்களில் விவரம் சொல்வதாகச் சொல்லியிருக்கிறார். இருவரும் ஒரு சுமுகமான நிலைக்கு வந்தால் என்னுடைய தொகுதி மக்கள் நல்லபடியாக வாழுவதற்கு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடு கட்டித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியம் 1971ம் ஆண்டு குடிசைப் பகுதி என்று அதை அறிவித்தபோதிலும், சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலே திருமதி சுபேதா பேகம் அவர்களுடைய 2 கிரவுண்டுக்கும் குறைவான இடம் மட்டுமே விலக்களிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் திருமதி பட்டம்மாள் போன்றவர்களுடைய நிலங்களுக்கு உயர்நீதிமன்றத்திலே விலக்களிக்கப்படவில்லை என்பதையும், அந்த இடத்தை குடிசைமாற்று வாரியம் வாங்கவேண்டுமென்றால் சந்தை விலையிலே வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, அதைப்போன்று அவர்கள் சமாதான அடிப்படையிலே அரசோடு, குடிசைமாற்று வாரியத்திற்கு குறைந்த விலைக்குத் தருவதாக இருந்தால் குடிசை மாற்று வாரியம் அந்த இடத்தை வாங்கிக்கொள்ள இயலும் என்பதையும், மேலும் அவர்கள் அந்த நிலத்தை வாங்கினாலும், அங்கு

ஏராளமான குடிசைகள் இருக்கிற காரணத்தாலே, மிகக் குறைந்த அளவுள்ள அந்த நிலத்திலே அத்தனை பேருக்கும் அங்கேயே எல்லாவிதமான வசதி வாய்ப்புகளையும் உருவாக்கித் தர இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) கோவை மாவட்டம் குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பஞ்சாயத்துக்களில் சில பகுதிகள் சிறுவாணி குடிநீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே.பி ராஜு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.*

திரு. கே.பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சி பஞ்சாயத்திற்கு உட்பட்ட சுந்தராபுரம், எல்.ஐ.சி. காலனி, ஆத்துப்பாலம், ஈச்சநாரி, போத்தனூர், குனியமுத்தூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட குனியமுத்தூர், சுண்டக்காமுத்தூர், பி.கே.புதூர், சுகுணாபுரம், இடையர்பாளையம் ஆகிய பகுதிகளில் சிறுவாணி குடிநீர் பற்றாக்குறை காரணமாக மக்கள் அவதிப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சிறுவாணி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு தமிழக அரசு 26-11-76 ஆம் தேதி 16.16 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்தது. இத்திட்டம் 1976-77 ஆண்டு செயலாக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 21.96 கோடி ரூபாய் செலவில் 1982-83-ல் நிறைவேற்றப்பட்டு மக்களின் பயனுக்கு கொண்டு வரப்பட்டது.